மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) விதிகள் 30, 130, 132, ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். இன்று அறிமுகம் செய்யப்பட்ட 3 சட்டமுன்வடிவுகளையும் இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தி, 2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002), 2002 ஆம் ஆண்டு திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2002), 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2002) ஆகியன இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2002 மே 10] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

(ஐஐ) அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002) மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2002) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து வருகிற இரு சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு கல்வி அமைச்சருக்குத் தொடர்புடையவை. கருத்துகளைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் இந்த 3 சட்டமுன்வடிவுகளின்மீதும் கூறலாம். யார்? ஞானசேகரனா, லட்சுமணனா? (குறுக்கீடு) இல்லை, இல்லை. யாராவது ஒருவர்-- ஒரு கட்சிக்கு ஒருவர்--மட்டும் பேசுங்கள்.*

திரு. சி. ஞானசேகரன்: *திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வேலூரிலே வருவதால் நான் பேசலாம் என்றிருந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதையும் சேர்த்து லட்சுமணனைப் பேசச் சொல்லுங்கள்.*

திரு. வி.கே. லட்சுமணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் திருவள்ளுவர் பெயரிலே ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க இந்த அரசு முன் வந்திருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். அதற்கான சட்டமுன்வடிவு இன்றைக்கு வெளியிடப்பட்டிருக்கிறது. இந்தச்*

@ 10-5-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS